**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**D.V.C. No. 14/2024**

Deposition of PW1

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : அபிநயா | Defence | : |
| Husband Name | : தீபக் (எ) தினேஷ் | Court | : |
| Village | : சாயாவனம், பூம்புகார் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 27/25 | | |

Dated :27.05.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை:-**

நான் இந்த மனுவின் 1-ம் மனுதாரர் மற்றும் மனுதாரர் தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

08.11.2021 தேதியில் 1 மனுதாரருக்கும் 1 எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணத்தின் திருமண அழைப்பிதழின் அசல் **மசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்டு **மசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழின் கணினி நகல் **மசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 31.01.2024 தேதியிட்ட 1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாருக்கு அனுப்பிய வழக்கிறஞர் அறிவிப்பின் அசல் **மசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.02.2024 தேதியிட்ட மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் **மசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.